**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்ற சாதாரணக்கூட்டம்**
**நாள். 19.01.2024 வெள்ளி கிழமை நேரம் – காலை 11.00 மணி**

**நகர்மன்ற தலைவர் , துணை தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களால் கொண்டு வரப்படும் மன்றப்பொருள்**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் வெளிக்கொணர்வு முகமை அடிப்படையில் தூய்மை பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் M/s. ராம் அன் கோ என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்டுள்ளதை, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். 2255/2022/இ1, நாள். 08.05.2023–இன்படி பணிகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டு நகர்மன்ற தீர்மான எண் 417 நாள்30.05.2023 இன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

M/s. ராம் அன் கோ நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ளபடி வாகனங்களான Push Cart–25 Nos, BOV–9 Nos, LCV–4 Nos, Tipper Lorry – 1No ஆகிய வாகனங்கள் ஒப்படைக்கப்பட்ட நிலையில் மேற்படி நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி பணியாளர்கள் வாகனங்கள், ஓட்டுநர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் ஆகியவற்றை முழுமையாக கொண்டு பணிகள் மேற்கொள்ளாமல் குறைந்த அளவிலான பணியாளர்கள், வாகனங்கள், ஓட்டுநர்களைக்கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக நகரில் குப்பைகள் அதிக அளவில் சேகரமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் பயோமெட்ரிக் வருகை பதிவேடு பின்பற்றப்படவில்லை .தூய்மை பணியாளர்களுக்கு தேவையன பாதுகாப்பு உபகரணங்கள் ஏதும் வழங்கப்படவில்லை. குப்பைகள் உரிய முறையில் தரம் பிரிக்கப்படுவதில்லை. ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி பணிகள் செய்வது குறித்து அலுவலகம் மூலம் பல்வேறு அறிவிப்புகள் அனுப்பப்பட்டும், நேரில் அறிவுறுத்தியும் எவ்விதமான முன்னேற்றமான நடவடிக்கையினையும் ஒப்பந்தம் நிறுவனம் மேற்கொள்ளவில்லை.

இதுவரை குறைந்த அளவிலே பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும், ஒப்பந்த விதிகளை கடைபிடிக்காததாலும், முறையாக உரிய முறையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை செய்யாததாலும், செய்த பணிக்கு முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததாலும், மேற்க்கண்ட நிறுவனத்திற்கு இதுவரை எவ்வித பட்டியல் தொகையும் கொடுக்கப்படவில்லை.

மேற்படி தனியார்மய ஒப்பந்த நிறுவனம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை உரிய முறையில் மேற்கொள்ளாத காரணத்தினால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி ஒப்பந்த பணியை ரத்து செய்ய கோரி 06.12.2023 அன்று நகராட்சி ஆணையாளருக்கு கடிதம் வழங்கியுள்ளனர்.

நாளது தேதி வரை எவ்விதமான நடவடிக்கை எடுக்காத நிறுவனமான M/s. ராம் அன் கோ ஒப்பந்தத்தை பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதியும் நிர்வாகத்தின் நலன் கருதியும் ஒப்பந்தத்தினை ரத்து செய்து, திடக்கழிவு மேலாண்மை பணிகளை திறம்பட செய்வதற்கும், தக்க நடவடிக்கை மேற்கொள்வதற்கும் நகர்மன்ற தலைவர், துணை தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களால் பொருள் கொண்டு வரப்படுகிறது.

**தீர்மானம் எண்.585**

**தீர்மானம் :** பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதியும் நிர்வாகத்தின் நலன் கருதியும் ஒப்பந்தத்தினை ரத்து செய்து, திடக்கழிவு மேலாண்மை பணிகளை திறம்பட செய்வதற்கும், தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

**மன்றப்பொருள்– 1**

தமிழக அரசின் முதன்மை செயலர் (நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி துறை) அவர்களின் 28.11.2023–ஆம் தேதிய கூட்ட நடவடிக்கையில் இந்நகராட்சிக்கு சொந்தமான ஊராட்சி ஒன்றிய வசம் உள்ள சர்வே எண் 240/1 pt–இல் உள்ள சொத்துக்களை (7 ஏக்கர் 85 செண்ட் நிலம்) நகராட்சி வசம் ஒப்படைக்க முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை அவர்களின் கடித ந.க எண் 351/2021/உ.இ.(ஊ)அ2 நாள் 15.12.2023–இல் நகராட்சிக்கு சொந்தமான ஊராட்சி ஒன்றிய வசம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களை (7 ஏக்கர் 85 செண்ட் நிலம்) இந்நகராட்சிக்கு ஒப்படைக்கவும், முதற்கட்டமாக பேருந்து நிலையம் அருகில் உள்ள 1 ஏக்கர் நிலத்தினை பேருந்து நிலைய கட்டுமான பணிகளுக்கு உடன் ஒப்படைக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் 04.01.2024 அன்று மதுரை மாவட்ட ஊராட்சி செயலர் முன்னிலையில் சர்வே எண் 240/1 pt T.S No 39–இல் உள்ள கடைகளுடன் கூடிய சொத்துக்களை நகராட்சி ஆணையாளர் வசம் ஒப்படைக்கப்ட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 1507/1999/இ1

**தீர்மானம் எண்.586**

**தீர்மானம் : மன்றம் பதிவு செய்கிறது.**

---

**மன்றப்பொருள்– 2**

மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க எண் 2354/2023/டி2 நாள் 02.11.2023–இல் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மேலப்பூதூர் ஆர்.சி தொடக்கப்பள்ளியில் புதிய இரண்டு எண்ணம் வகுப்பறை கட்டிடங்கள் கட்டும் பணிகள் ரூ.27.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க எண் 1735/2023/இ1)

**தீர்மானம் எண்.587**

**தீர்மானம் : மன்றம் பதிவு செய்கிறது.**

---

**மன்றப்பொருள்–3**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க எண் 9292/2022/SBM 1 நாள் 17.11.2023–இல் தூய்மை இந்தியா திட்டம் (நகர்) 2.0 , திரவ கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்ட நீரினை சுத்திகரிப்பு செய்ய இந்நகராட்சியில் புதிதாக 4.7 MLD, 10 KLD அளவுள்ள STP cum FSTP அமைக்க விரிவான திட்ட அறிக்கை Tamilnadu water investment company (TWIC) நிறுவனம் மூலம் தயார் செய்யவும், மேற்படி திட்ட அறிக்கை தயார் செய்வதற்கான (Consultancy Charges) கட்டணத்தை நகராட்சி மூலம் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி Tamilnadu water investment company (TWIC) கடித எண் TWIC/TTRO/ DMA STP / water நாள் 12.12.2023–இல் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ரூ.15.00 (இலட்சம்) கட்டணம் செலுத்துமாறும், முன்பணமாக 1 MLD–க்கு ரூ.1.00 (இலட்சம்) செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி 4.7 MLD, 10 KLD அளவுள்ள STP cum FSTP அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஆகும் செலவினத்தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 1580/2023/இ1)

**தீர்மானம் எண்.588**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–4</u>

உசிலம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் மின் மோட்டார் இயக்குதல், குடிநீர் வால்வு திறந்து மூடுதல், மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் கீழ்க்கண்ட விபரப்படி பணியாளர்கள் 5 மாத காலத்திற்கு நியமனம் செய்யவும் அதற்காகும் செலவனத் தொகை ரூ.5.00/– (இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| குழாய் திறப்பாளர் | – | 3 நபர்கள் |
| பைப் மஸ்தூர் | – | 2 நபர்கள் |

<u>அலுவலக குறிப்பு</u>

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க எண் 2098/2023/இ1)

**தீர்மானம் எண்.589**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–5</u>

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டிகள் 8 எண்ணம் சுத்தம் செய்யவும், நீர்த்தேக்க தொட்டி அமைந்துள்ள இடத்தினை கண்காணிக்கவும், மின் மோட்டார் இயக்குதல் மற்றும் குடிநீர் வால்வு திறந்து மூடுதல், மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் கீழ்க்கண்ட விபரப்படி பணியாளர்கள் 5 மாத காலத்திற்கு நியமனம் செய்யவும் அதற்காகும் செலவனத் தொகை ரூ.5.00/– (இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| குழாய் திறப்பாளர் | – | 3 நபர்கள் |
| பைப் மஸ்தூர் | – | 2 நபர்கள் |

<u>அலுவலக குறிப்பு</u>

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க எண் 2109/2023/இ1)

**தீர்மானம் எண்.590**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–6**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சின்டெக்ஸ் மற்றும போர்வெல் அமைந்துள்ள இடங்களில் மின் மோட்டார் இயக்குதல் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு போதிய பணியளார்கள் இல்லாத காரணத்தினால் கீழ்க்கண்ட விபரப்படி பணியளார்கள் 5 மாத காலத்திற்கு நியமனம் செய்யவும் அதற்காகும் செலவனத் தொகை ரூ.5.00/– (இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| | | |
|---|---|---|
| பிளம்பர் | – | 3 நபர்கள் |
| பைப் மஸ்தூர் | – | 2 நபர்கள் |

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க எண் 2140/2023/இ1)

**தீர்மானம் எண்.591**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–7**

மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க எண் 1795/2022/டி2 நாள் 22.12.2023–இல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022–2023–இன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட உசிலம்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (RO PLANT) அமைத்தல் பணிகளை ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க எண் 01/2024/இ1)

**தீர்மானம் எண்.592**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்– 8**

இந்நகராட்சியில் 2023–24 தூய்மை இந்தியா திட்டம் 2.0 –ன் கீழ் 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீர் உறிஞ்சும் (Cesspool Tanker) லாரி ரூ.43.25/– (இலட்சம்) மதிப்பீட்டில் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு உரிய பட்டியல் தொகை ரூ.22579/– மதுரை மணி நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 726/2023/இ1)

**தீர்மானம் எண்.593**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்–9</u>**

தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023–2024–இன் கீழ் மேலப்புதூர் ஆர் சி தொடக்கப்பள்ளியில் 2 எண்ணம் புதிய வகுப்பறை கட்டிடங்கள் கட்டும் பணிக்கு 27.12.2023 ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு 04.01.2024–இல் விலைப்புள்ளி திறக்கப்பட்டதில் குறைந்த விலைபுள்ளி மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ.எ. | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின் படி |
|---|---|---|---|---|
| 1 | மேலப்புதூர் ஆர் சி தொடக்கப்பள்ளியில் 2 எண்ணம் புதிய வகுப்பறை கட்டிடங்கள் கட்டும் பணி | ரூ.27.00/– | திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் | 0.35% மதிப்பீட்டை காட்டிலும் குறைவு |

மதிப்பீட்டு தொகையை காட்டிலும் குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் ஒப்பந்தபுள்ளியை ஏற்று மதிப்பீட்டு தொகையில் 2% LOA செலுத்திய உடன் வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1735/2023/இ1

**தீர்மானம் எண்.594**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–10</u>**

பள்ளி மேம்பாட்டு மானியத்தின் கீழ் கருக்கட்டான்பட்டி கள்ளர் நடுநிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிக்கு மூலதன பணி மற்றும் இயக்குதல், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 14.12.2023 ஒப்பந்தபுள்ளி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு 04.01.2024–இல் விலைப்புள்ளி திறக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ.எ. | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | கருக்கட்டான்பட்டி கள்ளர் நடுநிலைப்பள்ளி மற்றும் மேல்நிலை பள்ளிக்கு புதிய கழிப்பறை கட்டிடம் மற்றும் சுற்றுசுவர் அமைத்தல் பணி | ரூ.36.00/– | திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் | 2.07% மதிப்பீட்டை காட்டிலும் மிக குறைவு |
| | | | கே பி கே கன்ஸ்ட்ரக்ஸன், ஒப்பந்ததாரர் | 0.09% மதிப்பீட்டை காட்டிலும் குறைவு |
| 2 | கருக்கட்டான்பட்டி கள்ளர் நடுநிலைப்பள்ளி மற்றும் மேல்நிலை பள்ளிக்கு பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு | ரூ.31.00/– | திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் | 2.03% மதிப்பீட்டை காட்டிலும் மிக குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணிகள் | | கே பி கே கன்ஸ்ட்ரக்ஸன், ஒப்பந்ததாரர் | 0.06% மதிப்பீட்டை காட்டிலும் குறைவு |

மதிப்பீட்டு தொகையை காட்டிலும் மிக குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் ஒப்பந்தபுள்ளியை ஏற்று மதிப்பீட்டு தொகையில் 2% LOA செலுத்திய உடன் வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1239/2023/இ1)

**தீர்மானம் எண்.595**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–11</u>

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள உயர்மட்ட நீர்தேக்க தொட்டிகள், சின்டெக்ஸ, போர்வெல் மற்றும எஸ் மேட்டுப்பட்டியில் அமைந்துள்ள தலைமை நீரேற்று நிலையம் போன்றவற்றில் மின் மொட்டார் இயக்குதல், குடிநீர் வால்வு திறந்து மூடுதல், மற்றும் ப்ராமரிப் பணிகளுக்கு போதிய பணியளார்கள் இல்லாத காரணத்தினால் 5 மாத காலத்திற்கு வெளிக்கொணர்வு மூலம் பணியளார்கள் நியமனம் செய்ய ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ.எ. | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டி சுத்தம் செய்தல், டிமன் மோட்டார் இயக்குதல், உயர்மட்ட நிர்த்தேக்க தொட்டி அமைந்துள்ள இடத்தினை பாதுகாத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் | ரூ.5.00/– | திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் | 0.12% குறைவு |
| | | | திரு.சீதாராமதாசன் & கோ, ஒப்பந்ததாரர் | 1.54% அதிகம் |
| 2 | எஸ் மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் மின் மோட்டார் இயக்குதல் பணிகளை மேற்கொள்ளவும், குடிநீர் வால்வு திறந்து மூடுவது தொடர்பான பணிகள் | ரூ.5.00/– | திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் | 0.12% குறைவு |
| | | | திரு.சீதாராமதாசன் & கோ, ஒப்பந்ததாரர் | 1.54% அதிகம் |
| 3 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிளில் உள்ள சின்டெக்ஸ் மற்றும் போர்வெல் பராமரிப்பு பணிகள் | ரூ.5.00/– | திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் | 0.12% குறைவு |
| | | | திரு.சீதாராமதாசன் & கோ, ஒப்பந்ததாரர் | 1.54% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2098, 2140, 2109/2023/இ1

**தீர்மானம் எண்.596**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–12</u>

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மண்சாலைகளை தார்ச்சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகளாக மாற்றியமைக்க கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பேவர் பிளாக் சாலைகளாக மாற்றியமைக்கும் பணிக்கு முழு மானியமாக ரூ.126.00 (இலட்சம்) மற்றும் தார் சாலைகளாக மாற்றியமைக்கும் பணிக்கு முழு மானியமாக ரூ. 72.00 (இலட்சம்) மதிப்பீட்டில் கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பபட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>தார்சாலைகளாக மாற்றியமைக்கும் பணி – 72.00 (இலட்சம்)</u>

1.எஸ்,ஓ,ஆர் நகர் குறுக்கு தெரு–7(119004R284),
2.டிக்கா நகர் குறுக்கு தெரு–4(119023R290),
3. டிக்கா நகர் குறுக்கு தெரு –5(119023R291),
4. டிக்கா நகர் குறுக்கு தெரு –2(119023R288),
5. டிக்கா நகர் குறுக்கு தெரு –1(119023R287),
6. டிக்கா நகர் குறுக்கு தெரு –3(119023R289),
7.கவண்டன்பட்டி மெயின் ரோடு–4(119023R286),
8.கவண்டன்பட்டி மெயின் ரோடு 1வது தெரு (119023R247),
9.அண்ணா நகர் முதல் தெரு(119022R231)

<u>பேவர் பிளாக் சாலைகளை மாற்றியமைக்கும் பணி 126.00 (இலட்சம்)</u>

1.ஜே பி ஆர் மகால் 1வது தெரு (119016S025),
2.அங்கம்மாள் ரைஸ் மில் 2வது தெரு (119004S086),
3.ஆச்சி ஒச்சாயி நகர் (119005S104),
4.காளியம்மன் கோவில் மெயின் தெரு (119008R192),
5.அண்ணா நகர் 4வது தெரு (119022S147),
6.அண்ணா நகர் 2வத தெரு (119022S145),
7.அம்பேத்கார் காலணி முதல் தெரு (119024S168),
8.பாண்டி கோவில் தெற்கு 1வது தெரு (119007S157).

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2319/2023/இ1

**தீர்மானம் எண்.597**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–13</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயற்கை இடர்பாடுகளால் மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணியின்போது சேதமடைந்த தார்சாலைகளை 15வது மத்திய நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் மறுசீரமைக்க முழு மானியமாக ரூ. 31.00 இலட்சம் மதிப்பீட்டில் கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பபட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>சீரமைக்கப்பட வேண்டிய தார் சாலைகள் விபரம் – 31.00 (இலட்சம்)</u>**

1. வீட்டு வசதி வாரிய காலணி (119002R012),
2.டி.இ.ஓ அலுவலக தெரு(119012R054)
3.டி.இ.ஓ அலுவலக தெரு(119012R057)
4.சொசைட்டி தெரு (119005R177),
5.குருசாமி கோவில் தெரு (119020R208).

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 2320/2023/இ1

**தீர்மானம் எண்.598**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–14</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயற்கை இடர்பாடுகளால் மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணியின் போது சேதமடைந்த சாலைகளை நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் (TURIP) கீழ் தார் சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகளாக சீரமைக்க முழு மானியமாக ரூ. 35.00 இலட்சம் மதிப்பீட்டில் கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பபட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>சேதமடைந்த சிமெண்ட் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்றும பணி – 35.00 (இலட்சம்)</u>**

1மாமரத்துபட்டி மேற்கு 3வது தெரு(119001L001),
2.அரண்மனை தெரு(119001S007),
3.மாமரத்துப்பட்டி மேற்கு 2வது தெரு(119001S002),
4.மாமரத்துப்பட்டி மேற்கு 1வது தெரு(119001S001),
5.சத்யா நகர் 1வது தெரு (119006R178),
6.சத்யா நகர் 2வது தெரு (119006R179)

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 2321/2023/இ1

**தீர்மானம் எண்.599**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–15</u>**

இந்நகராட்சியில் மின்னணு ஒப்பந்தபுள்ளிகள் இ–டெண்டர் முறையில் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய பயன்படத்தப்படும் பொறியாளர் மற்றும பொதுப்பணி மேற்பார்வையாளர் அவர்களின் காலவரையறை முடிவுற்றதால் ஒப்பந்தபுள்ளியின் அவசர அவசியம் கருதி இ–முத்ரா மூலம் புதுப்பிக்க 1 E–Token –க்கு ரூ.3500/– வீதம் இரண்டு E–

Token –க்கு ரூ.7000/– பொதுப்பணி மேற்பார்வையாளரால் செலவினப்பட்டதற்கு மேற்படி தொகை திரு.பா.பாலமுருகன், பொதுப்பணிமேற்பார்வையாளருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1239/2023/இ1

**தீர்மானம் எண்.600**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>**மன்றப்பொருள்–16**</u>

இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2022 – 2023–இன் கீழ் (சிப்பம் 7) ரூ.196.00 இலட்ச மதிப்பீட்டில் தார் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்றியமைக்கும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண் 559 நாள் 27.09.2023–இல் அனுமதி பெற்று சன்னாசி தேவர் தெருவிற்கு பதிலாக வி.எம் தெருவில் பேவர் பிளாக் அமைக்கும் பணிக்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்தெருவில் மழைநீர் வடிகால் வேண்டி நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்ததன் அடிப்படையில் மதிப்பீட்டிற்கு மிகாமல் மழைநீர் வடிகால் பணி ரூ.9.00 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2110/2022/இ1

**தீர்மானம் எண்.601**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>**மன்றப்பொருள்:–17**</u>

உசிலம்பட்டி நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளில் அவர்களது இருப்பிடத்திற்கு அருகிலேயே தனிநபர் சார்ந்த குறைகளை நிவர்த்தி செய்ய மக்களுடன் முதல்வர் எனும் திட்டத்தினை நகராட்சிகளில் நடத்திட அரசானது மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை அவர்களின் மூலமாக அந்தந்த மாவட்டங்களில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 7 இடங்களில் முகாம்கள் நடைபெறவுள்ளது. முகாமிற்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, இருக்கை வசதி, மின்சார வசதி, போதிய கணினிகள், உணவு, உரிய இணைய சேவைகள் மற்றும் அத்தியாவசிய வசதிகள் செய்ய வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 7.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:–**</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2096/2023/அ1)

**தீர்மானம் எண்.602**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>**மன்றப்பொருள்–18**</u>

உசிலம்பட்டி நகராட்சி புதிய பேருந்து நிலையம் கட்டிடம் கட்டுவதற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P.(MD) No. 11161

to 11165 of 2023 ஆகிய எண்களுக்கு திரு. வீர கதிரவன் கூடுதல் வழக்கறிஞர் அவர்கள் உசிலம்பட்டி நகராட்சி சார்பாக வழக்கு நடத்த கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் வழக்குரை கட்டணம் ரூ. 75,000/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 808/2023/அ1)

**தீர்மானம் எண்.603**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்-19</u>

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலும் கொசுக்களால் பரவும் தொற்று நோய்களை தடுப்பு பணிக்கு தேவையான கொசு ஒழிப்பு மற்றும் கொசுப்புழு ஒழிப்பு மருந்துகள் இருப்பு குறைவாக உள்ளதால் லெமன் கிராஸ் - 200லிட்டர், நிலவேம்பு பவுடர் -300 கிலோ, லைசால்-300லிட்டர், E.M சொலிசன்-300லிட்டர் எண்ணம் கொள்முதல் செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ.16.50 இலட்சத்திற்கு /- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1990 /2023/எச்.1)

**தீர்மானம் எண்.604**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்-20</u>

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலும் கொசுக்களால் பரவும் டெங்கு மற்றும் மலேரியா போன்ற தொற்று நோய்களை தடுப்பு பணிக்கு தேவையான கொசு ஒழிப்பு மற்றும் கொசுப்புழு ஒழிப்பு மருந்துகள் கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பொருட்கள் | தொகை.ரூ ( லிட்டர் ஒன்றுக்கு (ம) கிலோ ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | SREE THAI MOOKAMBIKA EXPORT COIMBATORE. | 1. லெமன் கிராஸ் ஆயில்.<br>2. நிலவேம்பு பவுடர்.<br>3. லைசால்.<br>4. E.M.சொலிசன் | ரூ.2540/-<br>ரூ.1700/-<br>ரூ.200/-<br>ரூ.1200/- |
| 2. | SRI BALAJI MARKETING DINDIGUL. | 1. லெமன் கிராஸ் ஆயில்.<br>2. நிலவேம்பு பவுடர்.<br>3. லைசால்.<br>4. E.M.சொலிசன். | ரூ.3300/-<br>ரூ.1800/-<br>ரூ.280/-<br>ரூ.1300/- |

மேற்காணும் விபரத்தின் படி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள SREE THAI MOOKAMBIKA EXPORT COIMBATORE, நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்குவதற்கு மன்றத்ததின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:-**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1990 /2023/எச்.1)

**தீர்மானம் எண்.605**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>**மன்றப்பொருள்-21**</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN58AW 2747-க்கு பழுதுநீக்கம் ஏற்பட்டுள்ளதால் மேற்படி வாகனத்தில் மூலமாக மதுரை அலுவலக கூட்ட நடவடிக்கைகள் மற்றும் வழக்கு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளைக்கு செல்வதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. எனவே ஈப்பு வாகனத்திற்கு பழுதுநீக்கம் மற்றும் ஆயில் சர்வீஸ் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.80,000-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:-**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2887/2013/எச்.1)

**தீர்மானம் எண்.606**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>**மன்றப்பொருள்-22**</u>

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் மேற்கொள்ளவும், டெங்கு, மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க கிருமிநாசினிகள் அபேட்-100 லிட்டர், பைரித்திரம்-150 லிட்டர், மற்றும் GasCylinder-200 எண்ணம் கொள்முதல் செய்வதற்கு ஏற்கனவே ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது சரக்கு மற்றும் சேவைவரி விலை ஏற்றத்தால் கூடுதல் செலவினத்தொகையாக ரூ.41,000/-க்கு மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:-**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.280/2022/எச்.1)

**தீர்மானம் எண்.607**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>**மன்றப்பொருள்-23**</u>

உசிலம்பட்டி நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் மேற்கொள்ள தூய்மை பணியாளர்களுக்கு தேவையான தளவாட சாமான்கள் கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை.ரூ<br>( பொருள் ஒன்றுக்கு வீதம் 12 வகை பொருள்களுக்கான தொகை) |
|---|---|---|
| 1 | SVS TRADERS<br>K.pudur, Madurai. | 4516 /- |
| 2 | GV AGENCIES<br>Lehro Arcade,Madurai. | 4549 /- |
| 3 | SRI SIVAN & CO<br>Ganga Nagar,Madurai | 4662 /- |

மேற்காணும் விபரத்தின் படி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள SVS TRADERS MADURAI, நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்குவதற்கு மன்றத்ததின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:-**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.280/2022/எச்.1)

**தீர்மானம் எண்.608**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்-24</u>

இந்நகராட்சி பொதுச்சுகாதார பிரிவு வாகனம் எண்.TN58As 3927-க்கு பழுதுநீக்கம் மேற்கொண்டு தகுதிசான்று பெறும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.62,000-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:-**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2013/2023/எச்.1)

**தீர்மானம் எண்.609**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்-25</u>

இந்நகராட்சி பொதுச்சுகாதாரப்பிரிவில் கொசுக்களால் பரவும் நோய்களான டெங்கு, சிக்குன் குனியா, மலேரியா போன்ற நோய்கள் பரவுவதை தடுக்கவும்ட, கொசுப்புழுக்கள் உற்பத்தியாவதை தடுக்கவும், ஏற்கனவே 36 DBC பணியாளர்கள் M/s. தேவதர்ஷினி மேன்பவர் ஏஜென்சி மூலம் 31.12.2023 வரை ந.க.எண். 91/2015/எச்.1, , நகர்மன்ற தீர்மானம் எண். 436 நாள். 30.05.2023-இன்படி தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். தற்போது வடகிழக்கு பருவமழை பெய்து வருவதால் மலேரியா டெங்கு போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கவும், பொதுச்சுகாதாரப்பணியினை கருத்தில் கொண்டும் இதே M/s.தேவதர்ஷினி மேன்பவர் ஏஜென்சி மூலம் 36 DBC பணியாளர்கள் பணிகளை மேற்கொள்ள 01.01.2024 முதல் 31.03.2024 வரை மூன்று மாதத்திற்கு மட்டும் அனுமதி வழங்குவற்கும், புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி 01.04.2024 முதல் மேற்கண்ட பணிகளை செய்வதற்கும் அல்லது மகளிர் சுயஉதவிக்குழு மூலம் பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 91/2015/எச்.1)

**தீர்மானம் எண்.610**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–26**

இந்நகராட்சி வார்டு 01 முதல் 24 வரை உள்ள வார்டுகளுக்கு தினசரி வைகை பிரத்யோக கூட்டு குடிநீர் மூலம் நாள் ஒன்றுக்கு 4.00mld குடிநீர் பெறப்பட்டு நகராட்சிக்கு சொந்தமான 9 உயர் மட்ட நீர் தேக்க தொட்டிகளில் ஏற்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.மேற்படி குடிநீர் விநீயோகம் செய்வதற்கு 24 வார்டுகளில் உள்ள தெருக்களுக்கு குடிநீரினை பிரித்து கொடுப்பதற்கு ஆங்காங்கே வால்வுகள் அமைக்கப்பட்டுள்ளது.மேற்படி அமைக்கப்பட்டுள்ள வால்வுகள் முறையாக பராமரிக்க முடியாமல் உள்ளது.எனவே முதற்கட்டமாக நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் வால்வு தொட்டி அமைக்க ரூ.9.90/–இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதியில் இருந்து பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 33/2023/இ1

**தீர்மானம் எண்.611**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்: –27**

இந்நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநராக பணிபுரியும் திரு.எஸ்.ஜெயராஜ்பாண்டி என்பவரது ஒப்பந்த காலம் 22.01.2024 உடன் முடிவடைவதால் மேற்படி ஒப்பந்தத்தை மேலும் ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பது தொடர்பாக TEXCO (Tamilnadu Ex sevieman's corporation limited) மதுரை நிறுவன கடித எண் 8145/2024–2025/01/A10 நாள் 28.11.2023–இல் கீழ்க்கண்ட சம்பள தொகைக்கு கோரப்பட்டுள்ளது.

ஓட்டுநர் ஒரு நபர் ஊதியம் – ரூ.24196/–

Service charge 8 சதவிகிதம்– ரூ.1935.68/–

GST (18 சதவிகிதம்) – ரூ.4703.70/–

மொத்தம் – ரூ.30835.38/– (30835)

எனவே மேற்படி தொகைக்கு ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்ததத்தை புதுப்பிக்கவும் அதற்காகும் செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.254/2017/சி1)

**தீர்மானம் எண்.612**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–28**

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை 3 ஆண்டு இனங்களின் உரிம்ம் காலம் ஆனது 31.03.2024 தேதியுடன் முடிவடைய உள்ளதால் 01.04.2024 முதல் 31.03.2027 வரை ஆண்டு குத்தகை முறையில் 3 ஆண்டுகளுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி குத்தகைக்கு விடுவதற்கு கீழ்க்கண்டவாறு பொறுப்புத்தொகை மற்றும் கூடுதல் பொறுப்புத்தொகை நிர்ணயம் செய்வதற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | குத்தகை இனத்தின் விபரம் | பொது ஏலம் / ஒப்பந்தப் புள்ளிக்கு பொறுப்புத் தொகை ரூ. | கூடுதல் பொறுப்புத் தொகை ரூ. | மின் கட்டணம் வைப்புத் தொகை ரூ. | குத்தகை உரிம காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 4,00,000 | 4,00,000 | இல்லை | 01.04.2024 முதல் 31.03.2027 வரை |
| 2 | நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலையோர கடைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 5,00,000 | 5,00,000 | இல்லை | 01.04.2024 முதல் 31.03.2027 வரை |
| 3 | நகராட்சி ஆடுவதைக் கூடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1,00,000 | 1,00,000 | 5000 | 01.04.2024 முதல் 31.03.2027 வரை |
| 4 | நகராட்சி எல்லைக்குட்பட்ட நெடுஞ்சாலையில் உள்ள புளிய மரங்களின் மகசூல்களை அனுபவிக்கும் உரிமம் | 2000 | 2000 | இல்லை | 01.04.2024 முதல் 31.03.2027 வரை |

மேலும், பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வந்த கட்டண கழிப்பறை இடிக்கப்பட்டு புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருவதால் இந்த நிதியாண்டில் மேற்கண்ட இனத்தை தவிர்த்து மற்ற இனங்களுக்கு ஏலம் கோரப்படுகிறது மற்றும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விளம்பரத்தினை தமிழ் தினசரி நாளிதழ்களின் வெளியிடுவதற்கும் இதர செலவினத்திற்கும் ரூ. 2,00,000/–(ரூபாய். இரண்டு இலட்சம்) உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளியான சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளிக்கான விதிகள் 2000–ன்படியும், பகிரங்க ஏலம் மூலமும் குத்தகை உரிமையை ஏற்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.613**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–29**

## FORMAT FOR COUNCIL RESOLUTION

1. Resolved that the Usilampatti Municipality is authorised to borrow a loan amount of **Rs.150.60 Lakhs** for " Conversion of existing street lights into energy efficient LED lights (1430 Nos)" from Tamil Nadu Urban Finance Infrastructure Development Corporation Ltd (TUFIDCO), under State Urban Infrastructure Development Fund (SUIDF), as per the terms and conditions prescribed by G.O.(Ms)No.145, MA&WS (MA2) Dept., dated 14-10-2022.

2. Resolved that the Usilampatti Municipality is hereby authorised to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other formalities including affixing the common seal of the Usilampatti Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of the Usilampatti Municipality.

3. Resolved that the Usilampatti Municipality bank account on the revenue collection such as property tax, professional tax and other revenue collections shall be escrowed / to the extent of quarterly / monthly repayment commitment in favour of TUFIDCO. This exclusive escrowed account will be in existence till the time of clearing the loan and all other dues under this project to TUFIDCO.

4. Resolved that the Executive officer be and hereby authorized to make necessary budgetary provisions in the annual budget for the repayment of principal, interest and other monies due for the loan availed for this project proposal to TUFIDCO.

5. Resolved to agree, to adjust by the Government of Tamil Nadu from funds receivable for Usilampatti Municipality such as Devolution grant payment under State Finance Commission recommendation, other grants, share on tax and stamp duties due from the Government, in the event of default in repayment of principal, interest and other monies due to TUFIDCO in respect of loans availed for this project.

6. The Usilampatti Municipality shall submit an undertaking stating that if for any reason, the projected increase in property tax, professional tax etc., could not be implemented, the short fall if any arising in any period shall not affect the timely repayment of its dues to TUFIDCO and in such case the Government may be permitted to deduct the said dues out of the SFC funds on the first priority basis.

   **Resolution No:-614**

ஆணையாளர்
உசிலம்பட்டி நகராட்சி